# கடலூர் பெருநகராட்சி

2020ம் ஆண்டு **ஜனவரி** மாதம் 31–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்கண்ட பொருட்களை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 30.01.2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

*பொருட்கள்*

| | |
|---|---|
| 1) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு 24 ராமானுஜம் நகர் பகுதியில் பழுதடைந்த தார் சாலைகள் புதுப்பிக்கும் பணி மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் 2017ன் கீழ் ரூ. 5.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள திருமதி. ஏ. பமீனா, 56/13 மோகன் சிங் தெரு, கடலூர் முதுநகர், கடலூர் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது.<br><br>மேற்படி பணியினை உடனடியாக துவங்கி முடிக்க அறிவுறுத்தியும், தவறும் பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படுமென 23.08.2018ல் எச்சரிக்கை அறிவுப்பு கடிதம் ஒப்பந்ததாரருக்கு அனுப்பப்பட்டது. ஆனால், தற்போது வரை ஒப்பந்தபத்திரம் கொடுக்காமலும் பணியினை துவங்காமல் மெத்தனமாக இருந்து பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக இருந்து வருவதால், குறிப்பிட்ட காலத்துக்குள் பணியினை முடித்து முடிவு அறிக்கை வழங்க இயலாத நிலை உள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள வேண்டி பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் தெரிவித்துள்ளதாலும், இப்பணி பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான சாலைப் பணியாதலாலும் மேற்படி பணியினை ஒப்பந்த விதிகளின்படி முடிக்காததாலும் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணிக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணிக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம் |

| 2) | கடலூர் பெருநகராட்சிக்கு 14 வது நிதிக்குழு பரிந்துரையில் மத்திய நிதிக்குழு மானியம் (CFC Grant ) ரூ. 1047.73 இலட்சம் இரண்டு தவணையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் முதல் தவணையாக ரூ. 523.86 இலட்சத்திற்கு மழையினால் சேதமடைந்த சாலைப்பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காண் நிதிஒதுக்கீட்டில், கடலூர் நகராட்சிக்குட்பட்ட 45 வார்டு பகுதிகளில் மழையினால் சேதமடைந்த 13 சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.541.25 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட சாலைப்பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இவற்றில் மத்திய நிதிக்குழு மானியம் ரூ. 523.86 இலட்சம் போக, கூடுதல் செலவினம் ரூ. 17.39 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
|---|---|

| **S.No.** | **Name of the work** | **Estimate Amount** (Rs. In Lakhs) |
|---|---|---|
| 1 | Renovation of existing BT surface to Madha koil back side road , Uppalavadi main road ,Badmavathi nagar 4 th&5 th cross, Dhanavalli nagar, Dhatchinamoorthi nagar & Pudhuuppalavadi road in ward No.1 and 9 . | **45.00** |
| 2 | Renovation of existing BT and CC surface to BT at Gandhi street,Vilva Nagar main road road & Shanmugam street in ward No.2,4 & 6. | **48.25** |
| 3 | Providing CC pavement to Anna market inner road and Muthiya nagar in ward No.7,8 | **43.00** |
| 4 | Renovation of existing BT surface to Ankalamman koil and Kamarajar nagar street and KDR nagar in ward No.7. | **45.00** |
| 5 | Renovation of existing BT surface to Pennaiyar roada and Basiyam street in ward No.8 and 11 | **43.50** |
| 6 | Renovation of existing CC surface at Dhanalaxmi nagar in ward No.9. | **19.50** |
| 7 | Renovation of existing BT surface to Old collector office road ,St.Joseph school road and Abdul kader street in ward No.11. | **45.50** |
| 8 | Renovation of existing BT surface to Judge bungalow road and kamarajar nagar in ward No.13 & 17 | **47.50** |
| 9 | Renovation of existing CC Pavement at Bharathi nagar,South north street vannarapalayam,Devanampattinam Appadurai street,Chokkalinga street and pudupalayam sundalkaran street and kattunayakan street in ward No.14,15,16 and 21 | **45.00** |
| 10 | Renovation of existing BT surface to Rathinavel nagar and Ramadoss Street in ward No.17,18,19,20. | **33.00** |
| 11 | Providing and Renovation of existing CC surface at Anikaran street , Vallivilas dhandapani street,Kamalam nagar cross road and Attrankarai veethi in ward No.25,26,28 & 39. | **40.25** |
| 12 | Providing and Renovation of BT surface to Kowsalya nagar,Old police station to sanjeeverayan street and Harbour road in ward No.28,40 & 45 | **49.50** |

| | | |
|---|---|---|
| 13 | Renovation of existing BT and CC surface to Pallivasal street ,Salt office road and Sovaiyan road in ward No.43 & 45 | **36.25** |
| | | **541.25** |

அ.கு.

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான மத்திய நிதிக்குழு மானியம் ரூ. 523.86 இலட்சம் போக, கூடுதல் செலவினம் ரூ. 17.39 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

3) கடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் அங்கன்வாடி மையங்களை தரம் உயர்த்துதல் மற்றும் பழுது நீக்குதல் பணிகளுக்கு கடலூர் நகராட்சிக்கு பின்வரும் பணிகளை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பரிந்துரை செய்யப்பட்ட பணியின் விவரம் | மதிப்பீடு. (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குண்டுசாலை அங்கன்வாடி மையத்தில் உள்ள சமையலறை, இருப்பறை, விளையாட்டுத்திடல், கழிவறை மற்றும் மேற்கூரை பழுது நீக்கும் பணி. | 2.00 |
| 2 | செம்மண்டலம் அங்கன்வாடி மையத்தில் உள்ள சமையலறை, இருப்பறை, கழிவறை மற்றும் மேற்கூரை பழுது நீக்கும் பணி. | 2.00 |
| | மொத்தம் | 4.00 |

மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 2 பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.அ3/3892/19. நாள் 13.08.2019ல் நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்

4) கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட 45 வார்டு பகுதிகளில் உள்ள அனைத்து தெருவிளக்குகள் 8268 Nos. பராமரிக்கும் பொருட்டு 12.09.2016ல் ஒப்பந்தப்புள்ளி கோரி ரூ.98.00 இலட்சம் மதிப்பீட்டில் சன் வி.பி.எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர் என்ற நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஓராண்டிற்கு (01.10.2017 முதல் 30.09.2018 வரை ரூ.99,32,730/—க்கு ந.நி.4 எண் 1895 நாள் 28.07.2017) பணி நீட்டிப்பு செய்யப்பட்டு மன்ற அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டது. 15.05.2018 ல் (ஜுலை 2017 முதல் ஏப்ரல் 2018 வரை) தெருவிளக்கு பராமரிப்பு தொகை தரப்படவில்லை எனவும், 31.05.2018 வரை பணி மேற்கொண்டு பிறகு தெருவிளக்கு பராமரிப்பு பணியை நிறுத்திக் கொள்வதாகவும் மேற்கண்ட நிறுவனத்தார் கடிரம் வழங்கப்பட்டது. 30.06.2018வரை பணி மேற்கொள்ளுமாறு நகராட்சியில் தெரிவிக்கப்படுவதால் மேற்கண்ட நிறுவனத்தாரால் பணி மேற்கொள்ளப்பட்டது.

01.07.2018 முதல் தெருவிளக்குகள் பராமரிப்பு ணி மேற்கொள்ளும் பொருட்டு (மொத்த தெருவிளக்குகளின் எண்ணிக்கை 8540 எண்கள்) ஆறு மாத காலத்திற்கு (01.07.2018 முதல் 31.12.2018வரை) நகராட்சி மூலம் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்புள்ளி கோரி (LABOUR ONLY) ரூ.20.70 லட்சத்திற்கு மன்ற அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டது (ந.ம.தீ. எண் 2227 நாள் 29.06.2018) மேலும் மூன்று

| | |
|---|---|
| | மாதங்களுக்கு ஒருமுறை 01.01.2018 முதல் 31.12.2019 வரை நான்கு முறையாக (முறைறய ரூ.11.00 இலட்சத்திற்கு / 3 மாதத்திற்கு) பணி நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.<br>தற்போது 31.12.2019ல் தெருவிளக்கு பராமரிக்கும் பணி (LABOUR ONLY) முடிவடைவதால் 01.01.2020 முதல் தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள (01.01.2020 முதல் 30.12.2020 வரை) ஒரு வருட காலத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.48,00,000/– நிர்வாக அனுமதி வழங்கவும், முதற்கட்டமாக இப்பணி மேற்கொள்ள ஆறு மாத காலத்திற்கு மதிப்பீட்டு தொகை ரூ.24.00.000/– பொதுநிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 5) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட கேப்பர் மலை தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து சரவணா நகர், சோனான்குப்பம், பச்சையான்குப்பம், சிவானந்தபுரம், ஏணிக்காரன் தோட்டம், சுனாமி குடியிப்பு ஆகிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் வண்டிப்பாளையம், செல்லங்குப்பம், வில்வநகர் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு ஆகிய கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் அதற்கான மோட்டார்கள் வால்வுகளை இயக்கி பராமரித்திட பணியாளர்கள் விநியோகம் செய்யும் பணி மதிப்பீட்டுத் தொகை ரூ.4,42,000/–க்கு மன்ற அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது இப்பணிக்கு ஒப்பந்தகாலம் செப்டம்பர் 2019 உடன் முடிவடைவதால் ஏற்கனவே ஒப்பந்தப் பெறப்பட்டுள்ள ஒப்பந்ததாரரின் மூலம் அதே விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகைரூ.4,42,000/–நிர்வாக அனுமதியும் மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க. எண்.7183 /2019 /இ2 ) |
| 6) | கடலூர் நகராட்சிக்குட்பட்ட கேப்பர்மலை தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 11 எண்ணிக்கை 25 HP ஆழ்துளை கிணறு நீர்முழ்கி மோட்டார்களையும் மற்றும் அங்குள்ள அனைத்து உயர்நிலை, கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு படுகைகளை இயக்கி பராமரித்திட பணியாளர்களை விநியோகம் செய்யும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.3,30,000/–க்கு மன்ற அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது இப்பணிக்கு ஒப்பந்தகாலம் செப்டம்பர் 2019 உடன் முடிவடைவதால் ஏற்கனவே ஒப்பந்தப் பெறப்பட்டுள்ள ஒப்பந்ததாரரின் மூலம் அதே விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகைரூ.3,30,000/–நிர்வாக அனுமதியும் மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க. எண்.7180 /2019 /இ2 ) |

| | |
|---|---|
| 7) | கடலூா் நகராட்சிக்குட்பட்ட திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் பெறுகின்ற திருப்பாப்புலியூர், கம்மியம்பேட்டை, தீபன் நகர், காமராஜர் நகர், தேவனாம்பட்டினம், தேவனாம்பட்டினம் சுனாமி குடியிருப்பு, பத்மாவதி நகர், நேரு நகர் ஆகிய மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் கூத்தப்பாக்கம், குண்டுசாலை வீட்டுவசதி வாரிய குடியிருப்பு ஆகிய கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் அதற்கான மோட்டார்கள் வால்வுகளை இயக்கி பராமரித்திட பணியாளர்கள் விநியோகம் செய்யும் பணி மதிப்பீட்டுத் தொகை ரூ.4,42,000/—க்கு மன்ற அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது இப்பணிக்கு ஒப்பந்தகாலம் செப்டம்பர் 2019 உடன் முடிவடைவதால் ஏற்கனவே ஒப்பந்தப் பெறப்பட்டுள்ள ஒப்பந்ததாரரின் மூலம் அதே விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகைரூ.4,42,000/—நிர்வாக அனுமதியும் மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க. எண்.7181 /2019 /இ2 ) |
| 8) | கடலூா் நகராட்சிக்குட்பட்ட திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 12 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு நீர்முழ்கி மோட்டார்களையும் மற்றும் அங்குள்ள அனைத்து உயர்நிலை, கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு படுகைகளை இயக்கி பராமரித்தில் செய்யும் பணி மதிப்பீட்டு தொகை ரூ.3,30,000/—க்கு மன்ற அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது இப்பணிக்கு ஒப்பந்தகாலம் செப்டம்பர் 2019 உடன் முடிவடைவதால் ஏற்கனவே ஒப்பந்தப் பெறப்பட்டுள்ள ஒப்பந்ததாரரின் மூலம் அதே விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகைரூ.3,30,000/—நிர்வாக அனுமதியும் மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம் (ந.க. எண்.7182 /2019 /இ2) |
| 9) | கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட 45 வார்டு பகுதிகளில் 8500 எண்கள் தெருவிளக்குகள் பராமரிப்பு 01.07.2018 முதல் நகராட்சி மூலம் தெருவிளக்கு மின் உபகரணங்கள் வாங்கப்பட்டு, தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்ததாரர் மூலம் குறைந்தபட்ச பணியாளர்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின் உபகரணங்கள் 25.06.2018—ல் ஒப்பந்தம் கோரி மின் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், 10.09.2018—ல் ஒப்பந்தபுள்ளி கோரி ரூ.9.50 இலட்சம் மின் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பணிக்கு, மேற்கண்ட ஒப்பந்த விலைப்புள்ளியில் 04.02.2019—ல் ரூ.9.50 இலட்சத்திற்கும், 03.07.2019—ல் ரூ.6.50 இலட்சத்திற்கும் மற்றும் 31.10.2019—ல் ரூ.9.50 இலட்சத்திற்கும் மின் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தற்போது, மின் உபகரணங்கள் இருப்பு குறைவாக உள்ளதால் மீண்டும் மின் உபகரணங்கள் கொள்முதல் செய்ய ரூ.9.50 இலட்சத்திற்கு PWD (19—20)—ல் தரப்படுத்தப்பட்ட விலை விகித பட்டியலின்படி மற்றும் உள்ளூர் விலைப்புள்ளியின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும் இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசரம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க. எண்.213 /2020 /இ2 ) |
| 10) | கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட 45 வார்டு பகுதிகளில் உள்ள அனைத்து தெருவிளக்குகளை ஆறுமாத காலத்திற்கு பராமரிக்கும் (LABOUR ONLY) பணியினை ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 31.12.2019–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.<br><br>(அட்டவணை கீழே)<br><br>மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திருமதி. R. நவநீதம், கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.13% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . திருமதி. R. நவநீதம், கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திருமதி. .R. நவநீதம், கடலூர் | 0.13% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | மெஸர்ஸ்.மகாலட்சுமி எண்டர்பிரைசஸ், கடலூர். | 0.45% மதிப்பீட்டை விட அதிகம். |

| | |
|---|---|
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்938/ 2014/ இ2) |
| 11) | கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் பெறுகின்ற திருப்பாப்புலியூர், கம்மியம்பேட்டை, தீபன் நகர், காமராஜர் நகர், தேவனாம்பட்டினம், தேவனாம்பட்டினம் சுனாமி குடியிருப்பு, பத்மாவதி நகர், நேரு நகர் ஆகிய மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் கூத்தப்பாக்கம், குண்டுசாலை வீட்டுவசதி வாரிய குடியிருப்பு ஆகிய கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் அதற்கான மோட்டார்கள் வால்வுகளை இயக்கி பராமரித்திட பணியாளர்கள் விநியோகம் செய்யும் பணியினை ரூ.4.42 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 14.11.2019–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.<br><br>(அட்டவணை கீழே)<br><br>மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.03% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, கடலூர். | 1.03% மதிப்பீட்டை விட அதிகம். |

அ.கு.

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க. எண்.7181 /2019 /இ2)

12)

கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட கேப்பர்மலை தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 11 எண்ணிக்கை 25 HP ஆழ்துளை கிணறு நீர்முழ்கி மோட்டார்களையும் மற்றும் அங்குள்ள அனைத்து உயர்நிலை, கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு படுகைகளை இயக்கி பராமரித்திட பணியாளர்களை விநியோகம் செய்யும் பணியினை ரூ.3.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 14.11.2019—ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, கடலூர். | 0.58% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.04%மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

அலுவலக குறிப்பு –

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க. எண்.7180 /2019 /இ2)

13)

கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட கேப்பர் மலை தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து சரவணா நகர், சோனான்குப்பம், பச்சையான்குப்பம், சிவானந்தபுரம், ஏணிக்காரன் தோட்டம், சுனாமி குடியிப்பு ஆகிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் வண்டிப்பாளையம், செல்லங்குப்பம், வில்வநகர் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு ஆகிய கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் அதற்கான மோட்டார்கள் வால்வுகளை இயக்கி பராமரித்திட பணியாளர்கள் விநியோகம் செய்யும் பணியினை ரூ.4.42 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 14.11.2019—ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, கடலூர். | 0.90% மதிப்பீட்டை விட அதிகம். |

| | |
|---|---|
| | மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.03% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க. எண்.7183 /2019 /இ2) |
| 14) | கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 12 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு நீர்முழ்கி மோட்டார்களையும் மற்றும் அங்குள்ள அனைத்து உயர்நிலை, கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு படுகைகளை இயக்கி பராமரித்தில் செய்யும் பணியினை ரூ.3.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 14.11.2019-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, கடலூர். | 0.58% மதிப்பீட்டை விட அதிகம். |

| | |
|---|---|
| | மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.04 % மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . திரு.T. சேஷாத்திரி, கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க. எண்.7182 /2019 /இ2) |
| 15) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட கம்மியம்பேட்டை குப்பைகள் கொட்டும் தளத்தில் தற்போது பையோமைனிங் திட்டம் ரூ. 671.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்திட பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்குரிய இயந்திரங்களை அமைத்திட 125 மீட்டர் நீளம் * 55 மீட்டர் அகலத்திற்கு காலியிடம் தேவை என ஒப்பந்ததாரர் தெரிவித்துள்ளார். குப்பைகளை பிரித்திட மேற்கண்ட இடங்களை காலிசெய்து தருமாறு கூறியதின் பேரில் இப்பணியினை செய்திட 2 எண்ணிக்கை. பொக்லைன் இயந்திரங்களும் 3 எண்ணிக்கை 10டன் கொள்ளளவு கொண்ட லாரிகளும் தேவைப்படுகின்றன. மேற்படி வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் பணிக்கு முதற்கட்டமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ 8,50,000/- (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) க்கு நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை பையோமைனிங் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட SBM நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசர |

அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இச்செலவினத் தொகையை பையோமைனிங் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட SBM நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்

**16)**

கடலூர் பெருநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட 11 எண்ணிக்கை ஓட்டுநர்களின் தற்போது 3 எண்ணிக்கை பொதுசுகாதாரப் பிரிவு ஓட்டுநர்கள் வயது முதிர்வு மற்றும் இறப்பின் காரணமாக இறந்து விட்டனர். கடந்த 2007ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கான கனரக ஜேசிபி வாகனம் வாங்கப்பட்டு தற்போதுவரை பயன்பாட்டில் உள்ளது. தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்க இருப்பதாலும், இவ்வாகனத்தினை கொண்டு மழைநீர் கால்வாய்களில் அடைப்பு நீக்கவும், கழிவுநீர் குப்பைகளை அகற்றுதல ஆகிய அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இவ்வானத்தை இயக்குவதற்கு ஜேசிபி கனரக வாகன பிரத்தியேக ஓட்டுநர்கள் நகராட்சி வசம் இல்லாத காரணத்தினாலும், ஏற்கனவே உள்ள ஓட்டுநர்களுக்கு ஜேசிபி வாகனத்தை இயக்க பயிற்சி இல்லாத காரணத்தினாலும், ஏற்கனவே 3 எண்ணிக்கை ஓட்டுநர்கள் பணியிடம் காலியாக உள்ள நிலையில் இவ்வாகனத்தை நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களை கொண்டு இயக்க இயலாது என்பதாலும், அனுபவம் வாய்ந்த ஜேசிபி கனரக வாகன ஓட்டுநர் ஒருவரை ஒப்பந்தத்தின் மூலம் பணியில் ஈடுபடுத்திக் கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி உத்தேச செலவினம் ரூ.2,50,000/– க்கு மன்றத்தின் அனுமதி தேவைப்படுகிறது.

**அ.கு.**

பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி வருவாய் நிதியில் இருநூது ரூ.2,50,000/– ஐ செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க. எண் 8892/எச் 1 /19)

**17)**

கடலூர் பெருநகராட்சி எல்லைப்பகுதியில் அமைந்துள்ள 45 வார்டுகளில் நகரமைப்பு பிரிவால் அனுமதியளிக்கப்பட்ட மனைப்பிரிவுகள், தெருக்கள் மற்றும் வருவாய் பிரிவிலிருந்து பெறப்பட்ட நகர்கள் மற்றும் தெருக்களில் உள்ள காலிமனை மற்றும் கட்டிடங்களுக்கு சொத்து வரி மற்றும் காலிமனை வரி நிர்ணயம் செய்ய ஏதுவாக மண்டலம் மற்றும் மண்டல மதிப்பீடு நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளதால், மேற்படி மனைப்பிரிவுகளில் அருகாமையில் உள்ள நகர் மற்றும் தெருக்களின் மண்டலம் மற்றும் மண்டல மதிப்பீட்டின் அடிப்படையில் புதியதாக உருவாகியுள்ள நகர் பிரிவிற்கு மண்டலம் மற்றும் மண்டல மதிப்பீடு நிர்ணயம் செய்ய வருவாய் அலுவலரால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்கண்ட நகர்களுக்கு மண்டலம் மற்றும் மண்டல மதிப்பீடு நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | சொத்து வரி | | காலிமனை வரி | |
|---|---|---|---|---|---|---|
| | | | மண்டலம் | மதிப்பு | மண்டலம் | மதிப்பு |
| 1 | 8 | சண்முகம் தெரு | C | 1.05 | C | 0.20 |
| 2 | 9 | லட்சுமி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 3 | 9 | ஸ்ரீவிநாயகா அவென்யு | C | 1.05 | C | 0.20 |
| 4 | 14 | ராமதனபாக்கியம் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 5 | 15 | ராதா அவென்யு | B | 1.55 | B | 0.30 |
| 6 | 22 | பாரதிதாசன் தெரு | C | 1.05 | C | 0.20 |
| 7 | 22 | எத்திராஜ் நகர் (குப்பன்குளம்) | C | 1.05 | C | 0.20 |
| 8 | 22 | சங்கர் நகர் (குப்பன் குளம்) | C | 1.05 | C | 0.20 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | 23 | நண்பர்கள் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 10 | 28 | ஓம் செந்தில் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 11 | 29 | CKS சண்முகம் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 12 | 34 | ஸ்ரீவைஷ்ணவி தேவி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 13 | 35 | காமாட்சி சண்முகம் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 14 | 44 | KFC நகர் | C | 1.05 | C | 0.20 |
| | | | | | | |

| | |
|---|---|
| அ.கு. | அனுமதிக்கலாம். **( 6606/ 2015/ அ1)** |
| **18)** | கடலூர் பெருநகராட்சியில் தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் ஜெட்ராடிங் வாகனம் ரூ. **49.00** இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டுள்ளது. இவ்வாகனத்தினை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யவும், சாலைவரி மற்றும் காப்பீடு தொகைக்கு உத்தேச செலவீனத் தொகை ரூ **1,25,000/-** (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்தொகையினை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என ஒப்பந்த விதி எண் **12.7** –ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை வருவாய் நிதியிலிருந்து, வாகனம் விநியோகம் செய்துள்ள மெட்ராஸ் இன்பெரா, உடுமலைப்பேட்டை நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| **19)** | கடலூர் பெருநகராட்சி புதிய கட்டிடம் கட்டப்பட்டு, மின்வாரியம் மூலம் மும்முனை மின் இணைப்பு UG cable வழியாக பெறப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வந்தது. தற்போது பாரதி ரோட்டில் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்க பணியின்போது UG cable பாதிக்கப்பட்டது. அது தற்காலிகமாக சரி செய்யப்பட்டு இயங்கி வந்த நிலையில் தற்போது மின்அழுத்தம் அதிகரித்ததன் காரணமாக UG cable எரிந்து short Circut ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்படி UG cable மூலம் மின்இணைப்பு பெற முடியாததால், பயனற்ற cable இணைப்பை துண்டிக்கப்பட்டு, பழைய கட்டிடத்தில் உள்ள இணைப்பை தற்காலிகமாக பயன்படுத்தப்படுகிறது. மேற்கண்ட புதிய கட்டிடத்தில் அதிக மின்பளு பயன்படுத்தப்பட்டு வரப்படுவதால் புதியதாக service wire, overhead வழியாக (19/16 cable wire) பிடித்து பயன்படுத்தும் பணிக்கு தோராய செலவினம் ரூ.**1,50,000/–**ம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | **1)** மன்றம் அனுமதிக்கலாம்<br>**2)** பணியின் அவசரம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **20)** | கடலூர் பெருநகராட்சி, புதிய அலுவலக கட்டிடத்திற்கு முன்முனை மின் இணைப்பிற்கு service wire, overhead வழியாக 19/16 cable wire அமைக்கும் பணிக்கு ரூ.**1.50** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு **24.10.2019–**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | **0.06 %** மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | **0.71 %** மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.06% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**21)**

எதிர்வரும் ல் கடலூர் பெருநகராட்சியின் நகர்மன்ற தலைவர், வார்டு உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான நகர்ப்புற உள்ளாட்சி மன்ற சாதாரண தேர்தல் 2019 மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் தேர்தல், குழு உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான மறைமுக தேர்தல்கள் 2019 ஆகிய தேர்தல்களை நடத்திட கீழ்க்காணும் தலைப்புகளில் தேர்தல் செலவினம் **ரூ.46.85** இலட்சம் ஆகும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | தேர்தல் செலவினங்களின் தலைப்புகள் | உத்தேச தேர்தல் செலவினங்கள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2019 அறிவிப்பு வெளியானதும் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலுக்கு வந்தவுடன் நகரிலுள்ள அரசு கட்டிடங்கள், நகராட்சி கட்டிடங்கள், அனைத்து பள்ளி கட்டிடங்கள் மற்றும் தனியார் கட்டிட சுவர்களில் அனுமதியின்றி எழுதப்பட்டுள்ள அரசியல் கட்சி விளம்பரங்களை அழித்தல், டிஜிட்டல் பேனர்கள் அகற்றுதல் மற்றும் போஸ்டர்கள் அகற்றுதல் மற்றும் வாக்குப் பதிவின்போது வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தூரம் எல்லை கோடு அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் | **0.75** |
| 2 | வாக்குச்சாவடி பட்டியல், வாக்காளர் பட்டியல், மின்னணு வாக்கு இயந்திரத்தில் பொருத்தும் வேட்பாளர் பெயர், புகைப்படம், சின்னங்கள் அடங்கிய வாக்கு சீட்டுகள், அஞ்சல் வழி வாக்குச் சீட்டுகள் மற்றும் வாக்காளர்களுக்கு வழங்கும் பூத் சிலிப் ஆகியவைகள் அச்சடித்து பெற ஆகும் தோராய செலவினங்கள் (துட்டச்சு பணிகள் உட்பட) | **4.60** |
| 3 | வார்டு பிரிவினை நகர வரைபடங்கள், வாக்குச்சாவடி (Polling Station Map) வரைபடங்கள் (ஒவ்வொரு வாக்குச்சசாவடிக்கும் தனித்தனியே) மண்டலம் பிரிப்பு (Zonal Map) வரைபடங்கள், வாக்கு எண்ணிக்கை மையம் (Counting Centre) வரைபடங்கள் ஆகியவைகள் ஆட்டோ கேடு (Auto Cad)ல் தயாரித்து பெற ஆகும் தோராய செலவினங்கள் | **0.50** |

| | | | |
|---|---|---|---|
| | 4 | நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் பணிக்கு வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள் ஆகியோர்களுக்கு மூன்று முறை பயிற்சி வகுப்புகள் நடத்தும் பணி மேற்கொள்ளுதல், மண்டப வாடகை, ஒலிபெருக்கி அமைத்தல், வேட்பு மனு தாக்கலின்பொழுதும், வாக்கு பதிவு நாளிலும் மற்றும் வாக்கு எண்ணிக்கையின் போதும் வீடியோ படம் எடுத்தல் ஆகிய பணிகளுக்கு ஆகும் தோராய செலவினங்கள் | 1.25 |
| | 5 | நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் வாக்குச்சாவடிகளுக்கு தேவையான பொருட்கள், வாக்கு எண்ணும் மையத்திற்கு தேவையான பொருட்கள், சணல் சாக்குகள் (Gunny Bag) வாக்குச்சாவடி இலக்கமிடுதல், சாக்குகளில் எண்ணிடுதல் வாடகை மற்றும் இதர தோராய செலவினங்கள் | 3.50 |
| | 6 | அனைத்து வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை மையம் ஆகியவற்றில் மின்வசதி, சாய்தள வசதி, குடிநீர் வசதி,கழிவறை வசதி, ஷாமினா பந்தல், வயது முதிர்ந்தவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு வீல்சேர் வாடகை ஆகியவைகள், வாக்கு எண்ணிக்கை மையத்தில் பாதுகாப்பு வேண்டி, தடுப்பாணைஅமைத்தல், மின்தடை ஏற்படா வண்ணம் ஜெனரேட்டர் வாடகைக்கு எடுத்தல், அஞ்சல் வழி வாக்குச்சீட்டுகள் எண்ணிட வாக்கு எண்ணும் ட்ரே தயாரித்தல், அஞ்சல் வழி வாக்குகள் பெற தனியே பெரிய அளவில் ஒரு கலாய் தகட்டினால் ஆன வாக்குப்பெட்டி தயாரித்தல், வாக்கு எண்ணிக்கைக்கு தேவையான மேசைகள், நாற்காலிகள் வாடகைக்கு எடுத்தல் மற்றும் வாக்கு எண்ணிக்கை விவரத்தினை ஒவ்வொரு சுற்று முடிவடைந்தவுடன் வெற்றி பெற்ற வேட்பாளர்களின் பெயர்களை ஒலிபெருக்கி மூலம் அறிவிக்க ஆகும் தோராய செலவினங்கள் மற்றும் இதர செலவினங்கள் | 7.50 |
| | 7 | வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பேட்ஜ், தேர்தல் அவசரம ஸ்டிக்கர்கள், வார்டு உறுப்பினர் தேர்தல், தலைவர் தேர்தல் வேட்பாளர்கள் பெயர் அடங்கிய போஸ்டர்கள், வாக்குச்சாவடி எண் மற்றும் வாக்குப்பதிவு பகுதிகளின் தெருக்களின் பெயர்கள் அடங்கிய போஸ்டர்கள், வாக்குச்சாவடி மையைத்தில் வாக்காளர்கள சிரமமின்றி வாக்களிக்க ஏதுவாக வாக்குச்சாவடியில் உள்ளே, வெளியே ஸ்டிக்கர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி சின்னங்கள், சுயேட்சை வேட்பாளர்களுக்கான சின்னங்கள், அஞ்சல் வழி வாக்குச் சீட்டுகளுக்கான உறைகள் மற்றும் இதர அத்தியாவசிய எழுது பொருட்கள் வாங்கிட ஆகும் தோராய செலவினங்கள் | 3.25 |
| | 8 | மண்டல அலுவலர்களுக்கான வாகனம் வாடகை, டீசல் செலவினம், வாக்குச்சாவடி அலுவலர்கள், வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், வாகன ஓட்டுநர்கள், வரவேற்பு அலுவலர்கள், நுண் பார்வையாளர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் பிரிவு எழுத்தர் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO's) ஆகியோர்களுக்கான ஊக்க படிகள் (Incentive Allowance) வழங்க ஆகும் தோராய செலவினங்கள் | 18.00 |
| | 9 | நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் பணிகளுக்கு வேட்பு மனுக்கள் பெறும் நாட்கள், வாக்கு எண்ணிக்கை மையத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் காவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும், வாக்கு எண்ணும் மையத்தில் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்கள், ஊழியர்கள், பணியாளர்கள் மற்றும் பாதுகாவலர்கள் ஆகியோர்களுக்கான உணவீட்டு செலவினம் | 4.50 |

| | | |
|---|---|---|
| 10 | வாக்கு எண்ணுமிடம் பொருட்கள் கொண்டு கூடுதல் மின் விளக்குடன் அமைத்தல் பணி | 3.00 |
| | **மொத்தம்** | **46.85** |

**அ.கு.** மேற்படி செலவுத் தொகை தற்பொழுது பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், அரசுக்கு உரிய பிரேரணைகள் அனுப்பி, உரிய நிதி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**22)** கடலூர் பெருநகராட்சியின் வருடாந்திர குத்தகை இனங்களுக்கு 2010–11 முதல் 2016–17 வரை சேவை வரியாக செலுத்தப்பட வேண்டிய தொகை, கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் கண்டுள்ள விபரப்படி ரூ.1,98,34,150/– (ரூபாய் ஒரு கோடியே தொன்னூற்று எட்டு இலட்சத்து முப்பத்தி நான்காயிரத்து நூற்று ஐம்பது மட்டும்) ஆகும். இப்பொருள் தொடர்பாக இரண்டு வழக்குகள் உயர்நீதிமன்றத்திலும், ஒரு மேல்முறையீடு CESTAT – லும் இந்நகராட்சியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தற்போது GST AND CENTRAL EXCISE துறையினரால் SABKA VISHWAS SCHEME 2019 என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மேல்முறையீடு செய்யப்பட்ட தொகை ரூ.50.00 லட்சம் அல்லது அதற்கு குறைவாக இருப்பின், வரி கோரிக்கையின் தொகையிலிருந்து 70 % நிவாரணமாகவும், ரூ.50.00 லட்சத்துக்கு மிகுதியாக வரி கோரிக்கை இருப்பின் 50% நிவாரணமாகவும் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், செலுத்தப்பட வேண்டிய அபராதத் தொகை மற்றும் வட்டித் தொகை ஆகியவற்றை தள்ளுபடி செய்யவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நகராட்சி செலுத்த வேண்டிய சேவை வரி, அபராதத் தொகை மற்றும் மேல்முறையீடு செய்வதற்காக செலுத்தப்பட்ட Pre-Deposit தொகை ஆகியவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் CESTAT ஆகியவற்றில் இந்நகராட்சியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீடு வழக்குகளில் இறுதி தீர்ப்பாணை பெறப்பட்டாலும் கூட, இறுதியாக 50 சதவீதத் தொகை செலுத்தினால் போதும் என்று தீர்ப்பு வழங்கப்படும் பட்சத்திலும் கூட, இந்நகராட்சியால் தற்போது இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தால் செலுத்தப்பட வேண்டிய தொகையை போல 100ரூ தொகை கூடுதலாக செலுத்தப்பட வேண்டியிருக்கும் என்று சரக்கு மற்றும் சேவைவரி மதிப்பீட்டாளர் தனது 26.12.2019 ஆம் தேதிய கருத்துரையில் தெரிவித்துள்ளார். இதனால் நகராட்சியால் 2010–11 ஆம் ஆண்டு முதல் 18 சதவீதம் வட்டியுடன் சுமார் ரூ.300.00 லட்சம் செலுத்தவேண்டியிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்தின்கீழ் விண்ணப்பித்தால், இந்நகராட்சிக்கு ரூ.1,28,14,057 / – நிவாரணமாக கிடைக்கும். ரூ. 43,44,095/– மட்டுமே செலுத்தினால் சேவை வரி தொடர்பான வழக்குகள் முடிவு பெறும். இந்த நிகழ்வு சம்பந்தப்பட்ட தொகை மிக அதிகமானது என்பதாலும், இந்த திட்டத்தினை பயன்படுத்திக் கொண்டு விண்ணப்பிக்கப்பட்டால், இந்நகராட்சிக்கு கிடைக்கும் நிவாரணம் கணிசமான தொகையாக உள்ளதாலும், இந்நகராட்சியின் பற்றாக்குறை நிதிநிலைமையை கருத்தில் கொண்டு, மத்திய கலால் வரித் துறையின் SABKA VISHWAS SCHEME 2019 திட்டத்தின்கீழ் 31.12.2019 ஆம் தேதிக்குள் விண்ணப்பித்து இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தற்போதைய நிலையில் நகராட்சி சேவை வரி செலுத்தப்பட வேண்டிய விபரம் மற்றும் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விபரம், மேற்படி திட்டத்தின் கீழ் நகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய நிதியும் கீழ்க்கண்ட விபரப்படி பட்டியலிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

| Order in Original No, Date | Appeal / Petition No. | Amount involved (Rs.) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Duty payable | Penalty payable | Total | Pre deposit already paid | Balance to be paid towards Service Tax | The relief expected to be availed under the scheme with penalty | Service tax to be paid |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| OIO No.03 & 04./2017 | WP No. 31799/2017 | 1036709- | 103671- | 1140380- | 85676- | 1054704- | 829367- | 225337- |
| OIO No.05 & 06.2017 | WP No. 20851/2019 | 5847366- | 594737- | 6442103- | 0 | 6442103- | 3518420- | 2923683- |
| OIO No.19/.2016 dt.26.02.16 | ST/ 41779/2018 | 7570794- | 4680873- | 12251667- | 570000- | 11681667- | 8466270- | 3215397- |
| **Already paid** | | | | | **2020322 -** | | | |
| **TOTAL** | | **14454869-** | **5379281-** | **19834150-** | **2675998 -** | **19178474-** | **12814057-** | **4344095-** |

1) Panelty will completely be waived off (i.e. Rs.5379281)
2) Out of Rs.14454869/- the relief will be Rs.7434776/-
3) After adjusting Rs.2675998/- which we have paid, as the pre-deposit, we have to pay Rs.43,44,095/-

SABKA VISHWAS SCHEME 2019 விண்ணப்பித்து, இந்நகராட்சி செலுத்த வேண்டிய தொகை ரூ.19834150/– ல் ரூ.2675998/– மற்றும் ரூ.1,28,14,057/–ம் சேர்த்து ரூ.1,54,90,055/– போக மீதம் ரூ.43,44,095/– செலுத்த நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சிக்கு மதிப்பீட்டாளராக திரு.ஸ்ரீதர் பரிபூரணம் அவர்களை அமர்த்திக் கொள்ளவும், உரிய கட்டணம் தோராயமாக ரூ.20000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** அ) அனுமதிக்கலாம்.
ஆ) அவசர அவசியம் கருதி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**23)** கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட கம்மியம்பேட்டை குப்பைகள் கொட்டும் தளத்தில் இயந்திரங்களை அமைத்திட 125 மீட்டர் நீளம் * 55 மீட்டர் அகலத்திற்கு குப்பைகளை அகற்ற வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் பணி ரூ. 8.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 24.01.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு

| | |
|---|---|
| | வைக்கப்படுகிறது.<br><br>\| வ.எண் \| ஒப்பந்ததாரர் பெயர் \| மதிப்பீட்டு விகிதத்திற்கு \|<br>\| 1. \| திரு. கே. மாரிமுத்து, கடலூர். \| 0.23% மதிப்பீட்டை விட குறைவு. \|<br>\| 2. \| திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பாகூர் \| 0.23% மதிப்பீட்டை விட அதிகம். \|<br><br>மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு. கே. மாரிமுத்து, கடலூர். என்பவர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டை விட 0.23 % குறைவு ) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான திரு. கே. மாரிமுத்து, கடலூர். என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 24) | கடலூர் பெருநகராட்சியில் பணி செய்யும் ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட சரக்கு மற்றும் சேவைவரி (GST) நவம்பர் 2018 முதல் அக்டோபர் 2019 வரை அரசுக் கணக்கில் தொகைகள் செலுத்தி E-filing செய்யப்பட்டது.<br>எனவே, நகராட்சி சார்பில் GST E-filing செய்ய திரு.எ.கோவிந்தராஜ் வரி ஆலோசகர் மூலம் நடவடிக்கை மேற்கொண்டதற்கும், இனிவரும் காலங்களிலும் நடவடிக்கை மேற்கொள்வதற்கும், வருவாய் நிதிக் கணக்கிலிருந்து செலவினம் மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/— க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். (ந.க. 3416/ 2018/பி 1) |
| 25) | 2019 பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்த ஏதுவாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சிக்குட்பட்ட வாக்குச்சாவடிகளில் அடிப்படை கட்டமைப்பு பணிகள் செய்ய வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்கள். அதன்படி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 45 வார்டுகளில் வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள நகராட்சி பள்ளிகளில் உள்ள கட்டிடங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் அடிப்படை கட்டமைப்புகள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின்இணைப்பு வசதி, மின்மோட்டார் பொருத்துதல், வர்ணம் பூசுதல் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் சாய்வுதள பராமரிப்பு பணிகளை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட செலவின தொகை ரூ.16,06,486/— ஐ கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | 1) அனுமதிக்கலாம்<br>2) பணி மேற்கொள்ளப்பட்ட செலவின தொகை ரூ.16,06,486/—ஐ கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 26) | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் 06.01.2020 தேதிய ந.க. எண் 15891/ 2016/எச் 1 எண்ணிட்ட கடிதத்தில் நகராட்சிகளின் தரத்திற்கு ஏற்றவாறு நகராட்சி பொதுப்பணி பிரிவில் விதிகளின்படி மேலாளர், கணக்கர், வருவாய் அலுவலர், உதவி வருவாய் அலுவலர் பணியிடங்கள் உருவாக்கவும், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் பூர்த்தி செய்யவும், அனைத்து நகராட்சிகளிலும் செயற்குறிப்பு அனுப்பி வைக்கவும் தெரிவிக்கப்பட்ட நிலையில், தமிழ்நாடு பொதுப்பணி பிரிவில், நடைமுறையில் உள்ள |

பணியிடங்கள் விபரம், தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடம் குறித்து மண்டல வாரியாக அட்டவணை இணைத்து அனுப்பப்பட்டுள்ளதை சரித்தன்மை செய்தும், பரிசீலனை செய்தும், கலங்களை பூர்த்தி செய்து சான்றளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலூர் பெருநகராட்சி, 02.12.2008ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 23ன்படி, தேர்வுநிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

கடலூர் பெருநகராட்சிக்கு, தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகள்1970ன்படி தேர்வுநிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம்உயர்த்தப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் விபரம்

